# மேல் மாகாண சபை

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மேல் மாகாண சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்

**(அ) மாகாண சபை நிதியக் கணக்கு**

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியக் கணக்கு 2013 மார்ச் 14 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய கணக்குகள்**

2013 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்த நிலை கீழே தரப்பட்டுள்ளது.

| | | 2012 திசெம்பர் 31 இல | | |
|---|---|---|---|---|
| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்கு | 26 | 26 | - |
| (ii) | வருமானக் கணக்கு | 28 | 28 | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 42 | 42 | - |
| (iv) | வாணிப முற்பணக் கணக்குகள் | 02 | 02 | - |
| (v) | ஏனைய முற்பணக் கணக்குகள் | 05 | 05 | - |
| (vi) | நிதியக் கணக்குகள் | 06 | 06 | - |
| (vii) | நியதிச் சட்டக் கணக்குகள் | 09 | 08 | 01 |

### 1.2.2 கணக்குகள் இணங்காமை

குறித்த திணைக்களங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் மாகாண சபை நிதியக் கணக்குகள் (மாகாண திறைசேரி ஏடு) என்பவற்றுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்கு விபரம் | குறித்த திணைக்களக் கணக்குகளின் படி மீதி | மாகாண சபை நிதியக் கணக்குகளின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 19 கட்டு நிதிக் கணக்குகள் | 14,939,800 | 619,018,718 | (604,078,918) |
| 04 பொதுவைப்புக் கணக்குகள் | 94,159,105 | 87,857,399 | 6,301,706 |
| மாகாண சபை உத்தியோகத்தர்களின் 05 முற்பணக் கணக்குகள் | 168,041,726 | 172,041,244 | (3,999,518) |
| 02 ஏனைய முற்பணக் கணக்குகள் | 4,692,401 | (7,281,945) | 11,974,346 |
| 19 செலுத்தவேண்டிய கணக்குகள் | 24,005,787 | (63,628,490) | 87,634,277 |
| 02 வருமானக் கணக்குகள் | 13,367,767 | 12,800,576 | 567,191 |

### 1.2.3 விடுபடுதல்கள்

வருமானச் சேகரிப்புக் கணக்கின் படி, 2012 யூலை முதல் திசெம்பர் வரை பெற்றோலிய வரியாகப் பெறப்பட்டிருந்த ரூபா 1,787,995 தொகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிராமை

மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்கள் காண்பிக்கப்பட்டிராததுடன் அத்தகைய சொத்துக்கள் உள்ளமைக்கு நிதிக்கூற்றுக் குறிப்புகளிலும் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் படி நடைமுறையற்ற சொத்துக்களின் முரண் அறிக்கையின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,114,324,874 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மாகாண சபையிடம் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

#### பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மாகாண சபையின் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 20 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2013 மார்ச் 31 வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1981 இன் 26 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரமும் 1985 இன் I ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் மூலம் திருத்தப்பட்ட 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் 47 ஆம் பிரிவு | மக்கட் போக்குவரத்து அதிகாரசபை ஆரம்பித்த 1995 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் வரையான ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை செலுத்தப்படுகையில் படிப்பணம் தவிர்ந்த அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பங்களிப்புத் தொகை கணிப்பிடப்பட்டிருந்ததுடன் தொழில் வழங்குனர் மற்றும் தொழிலாளி ஆகிய இரு தரப்பினரும் 2011 ஆம் ஆண்டிற்காக ரூபா 11,242,973 தொகையும் 2012 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் வரை ரூபா 11,603,624 தொகையுமாக அவ் இரு ஆண்டுகளுக்குமாக மாத்திரம் ரூபா 22,846,597 தொகை செலுத்த வேண்டியிருந்தது. மேற்குறித்த பொறுப்பிற்கு மேலதிகமாக 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்தின் படி 5 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான தண்டப்பணத்திற்கும் அதிகாரசபை உட்படும். |
| (ஆ) 2002 திசெம்பர் 04 ஆம் திகதிய எச்ஆர்டீ/பீபீஎம்/2002/30 ஆம் இலக்க கல்வி அமைச்சுச் சுற்றறிக்கை மற்றும் ஆக்கபூர்வமான பயன்பாடு தொடர்பான வழிகாட்டி 21.1 ஆம் பிரிவு | பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட பணம் தாமதமின்றி குறித்த பணிக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை ஜயவர்தனபுர வலையக் கல்வி காரியாலயத்தின் கீழ் உள்ள நாற்பத்தி ஆறு பாடசாலைகளில் ஆக்கபூர்வமான பயன்பாட்டுக் கணக்குகளில் பயன்படுத்தப்படாத மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,751,828 ஆகக் காணப்பட்டது. 2013 பெப்ரவரி 18 ஆம் திகதி வரையிலும் அப் பணத்தொகை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததுடன் இதில் 10 பாடசாலைகளில் ஆக்கபூர்வமான பயன்பாட்டுக் கணக்குகளிலான மீதி ரூபா 500,000 தொகைக்கு மேற்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக்கோவையின் ஐஐ ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பதில் கடமை நியமனம், நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக மாற்றுத் தீர்வாகவே மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஸ்ரீ ஜயவர்தனபுர கல்வி வலயத்தின் 20 பாடசாலைகளில் ஆசிரியர் சேவையில் உத்தியோகத்தர்கள் நீண்ட காலமாக அதிபர் பதவிகளில் கடமை மேவுகை செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 2. வருமானம் மற்றும் செலவின முகாமைத்துவம்

### 2.1 வருமானம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான முரண்களுடனான பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2012 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம் | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடி யானது | முரண் | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடி யானது | முரண் |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வரி வருமானம் | 23,046 | 22,156 | 890 | 19,953 | 21,670 | (1,717) |
| வரிஅல்லாத வருமானம் | 2,833 | 3,947 | (1,114) | 1,855 | 2,847 | (992) |
| அரசாங்க மானியம் | 12,485 | 9,691 | 2,794 | 12,477 | 11,019 | 1,458 |
| மொத்தம் | 38,364 | 35,794 | 2,570 | 34,285 | 35,536 | (1,251) |

## 2.2 செலவினம்

| | 2012 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடியானது | முரண் | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடியானது | முரண் |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **செலவினம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 20,931 | 20,486 | 445 | 19,817 | 19,101 | 716 |
| ஏனையவை | 11,165 | 10,872 | 293 | 11,351 | 9,515 | 1,836 |
| மீண்டெழும் | 32,096 | 31,358 | 738 | 31,168 | 28,616 | 2,552 |
| மூலதன | 6,268 | 5,466 | 802 | 3,577 | 3,002 | 575 |
| மொத்தம் | 38,364 | 36,824 | 1,540 | 34,745 | 31,618 | 3,127 |

மீளாய்வாண்டின் மீண்டுவருஞ் செலவினத்தினதும் மூலதனச் செலவினதும் விகிதாசாரம் 6:1 ஆக இருந்தது

## 2.3 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியிலும் அண்மித்த முன்னைய ஆண்டுகள் இரண்டினதும் இறுதியிலான நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | **2012** | **2011** | **2010** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| வரி வருமானம் | 1,138,048,276 | 1,426,690,111 | 1,897,917,733 |
| வரியல்லாத வருமானம் | 394,127,295 | 1,248,958,145 | 1,086,708,932 |
| மொத்தம் | 1,532,175,571 | 2,675,648,256 | 2,984,626,665 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.
2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவகப் பதிவு அதிகாரச்சட்டத்தின் ''ஆ'' பட்டோலையின் 3 ஆம் கட்டளையின் படி தனியார் மருத்துவ நிறுவகப் பதிவு மற்றும் மீட்டலுக்கான கட்டணம் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபைக்குச் செலுத்த வேண்டியிருந்ததுடன் அக் கட்டணத்தில் 50 சதவீதத்திற்கு உரிய மாகாண சபைக்கு ஒழுங்குபடுத்தல் சபையால் அனுப்ப வேண்டியதாக இருந்த போதிலும் 2010, 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளிற்கு உரித்தாக எவ்வித வருமானமும் மேல் மாகாண சபைக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 1,029,280,733 பற்றாக்குறையானதுடன் இதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,918,439,938 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,947,720,671 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினம் ரூபா 2,742,207,125 ஆலும் மாகாண முதலீடு ரூபா 2,463,666,745 தொகையாலும் அதிகரித்தமை அவ் வீழ்ச்சி தொடர்பாக முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் 09 செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 154,589,350 தொகையான ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிராமையால் முற்றாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 15 அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் 48 செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டிற்கு மேலாக ரூபா 26,664,118 தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(இ) 05 செலவின விடயங்களில் ஏற்பாடு கழிக்கப்பட்டதை அடுத்து அச் செலவின விடயங்களுக்கு மீள ஏற்பாட்டை அதிகரித்த 05 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

### 3.3 கட்டுநிதிக் கணக்குகள்

மாகாண சபையின், மத்திய அரசின் ஏற்பாடுகளுக்கு உரித்தான கட்டுநிதிக் கணக்கு பேணப்பட்டிருக்கவில்லை. மாகாண திறைசேரி கட்டுநிதிக் கட்டுப்பாட்டுக் கணக்கின் படி, மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் மீளாய்வாண்டிற்காகவும் இதற்கு முன்னைய ஆண்டிற்காகவும் தீர்க்கப்பட வேண்டிய கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 454,307,191 ஆகக் காணப்பட்டது.

### 3.4 தீர்க்கப்படாத பொது வைப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண திறைசேரி பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 798,800,430 தொகையானதுடன் 02 ஆண்டுகள் காலாவதியான 14 நிறுவனங்களின் ரூபா 10,804,609 தொகையான வைப்பு மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முற்பணக் கணக்குகள்

### 4.1 மாகாண சபை உத்தியோகத்தர்களின் முற்பணங்கள்

18 அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் ரூபா 27,571,152 கூட்டுத்தொகையான மீதியும், மரணமான மற்றும் ஓய்வடைந்த உத்தியோகத்தர்களின் ரூபா 2,752,403 கூட்டுத்தொகையான மீதியும், சேவையை விட்டு விலகிய மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,603,616 கூட்டுத்தொகையான மீதியும், முன்னாள் மற்றும் மரணமான மாகாண சபை அமைச்சர்களிடமிருந்து ரூபா 297,743 தொகையான மீதியுமாக ரூபா 33,224,914 கூட்டுத்தொகையான நிலுவைக் கடன் மீதி அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதிருந்தது.

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல்

### 5.1.1 அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக கிடைத்த ஏற்பாடு மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | மூலம் | கிடைத்த ஏற்பாடு | செலவினம் | சேமிப்பு/ (மிகை) |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வகைப்படுத்தப்பட்ட மானியம் | 180,410,000 | 797,355,489 | (616,945,489) |
| (ii) | மாகாண குறித்த அபிவிருத்தி மானியம் | 405,000,000 | 1,642,649,744 | (1,237,649,744) |
| (iii) | ஒன்றிணைந்த மானியம் | 86,000,000 | 101,041,541 | (15,041,541) |
| (iv) | ஏனைய மானியம் உலக வங்கி நன்கொடை- கல்வி | 126,000,000 | - | 126,000,000 |

### 5.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் ரூபா 5,062.46 மில்லியன் பெறுமதியான 8829 வேலைத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றன.

| | | புதிய வேலை | தொடர்ச்சியான வேலை | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட | 8248 | 171 | 8419 |
| (ஆ) | 50% இனை விடக் குறைவாக பூர்த்தி செய்யப்பட்ட | 130 | - | 130 |
| (இ) | 50% இற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்ட | 132 | - | 132 |
| (ஈ) | ஆரம்பிக்கப்படாதவை | 145 | 01 | 146 |
| (உ) | சர்ச்சைக்குரிய/ பிரச்சினைகளுக்குரிய நிலையிலுள்ளவை | 02 | - | 02 |
| | **மொத்தம்** | 8657 | 172 | 8829 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருடாந்த காசுப்பாய்ச்சல் கூற்றின் மூலம் ஏற்பாடுகள் வழங்கப்பட்டு செலவினங்களைச் செய்யவேண்டிய மூலதனத் தன்மையிலான செலவினங்களுக்காக மாகாண அபிவிருத்தித் திட்டத்தில் வகைப்படுத்தப்பட்ட மானியம் மற்றும் மாகாண குறித்த அபிவிருத்தி மானிய செயற்திட்ட இலக்கத்தின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) 2007 இன் 01 ஆம் இலக்க மேலட மாகாண சபையின் கழிவுப்பொருள் முகாமைத்துவ 11 கட்டளை பகுதியின் 7(2) ஆம் பிரிவின் படி மாகாண நகர மற்றும் கிராமப் பகுதிகளில் சுற்றாடலுக்கு சேரும் கழிவுப் பொருளை உச்ச அளவில் தடுத்து பகுதியிலுள்ள பொதுமக்களைப் போன்று விலங்கினங்கள் மற்றும் பயிரினங்களின் நலனுக்காக சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வது நோக்கமாகக் காணப்பட்டது. எனினும், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய வெளி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் கழிவுப் பொருட்கள் ஏறத்தாழ நாளொன்றிற்கு 500 தொன் அளவானவை முறையற்ற விதத்தில் கறதியான் பகுதியில் அகற்றப்பட்டிருந்ததுடன் இக் கழிவை அகற்றியமையால் சுற்றாடலுக்கு ஏற்படும் அழிவு தொடர்பாக பொது மக்களினதும் வேறு நிறுவனங்களிலிருந்தும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தன.

(இ) மேல் மாகாண சபைக்குரிய 73 நிறுவனங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபை செயலகத்தால் 2012 ஆம் ஆண்டிற்காக 30 நிறுவனங்களின் அறிக்கை மாத்திரம் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 5.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் தனியார் வங்கிக்கு வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 453 மில்லியன் தொகையான முதலீடு 2008 ஏப்ரல் 28 ஆம் திகதிய அரச வர்த்தமானி அறிவித்தலின் படி வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக வங்கியுடன் உடன்பாடு அதிகாரசபையால் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சீனக் கடன் உதவியின் கீழ் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக தேவையான அஸ்போல்ட் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படக் கூடிய 2 இயந்திரங்களும் இதற்குத் தேவையான ஏனைய உதிரிப்பாகங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் 2011 நவம்பர் மாதத்தில் மேல்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இயந்திர உபகரண உற்பத்திச் செயற்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்பட்டு 8 மாதங்களின் பின்னர் 2012 யூலை மாதமே பயன்படுத்தப்பட்டிருந்தது.இவ் இயந்திரங்களின் பிணைக் காலம் 12 மாதங்களானதுடன் இதன் படி உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகையில் இதில் 08 மாத காலம் கடந்திருந்தது.

(இ) 2006 செப்தெம்பர் 04 ஆம் திகதி முதல் கைத்தொழில் ஆலோசகர் II "ஆ" தொகுதியின் பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரின் சேவை நிரந்தரமாக்கும் நடவடிக்கைகளுக்காக பரீட்சைப் பெறுபேறுகள் உறுதிப்படுத்தப்படுகையில் அவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தேசிய தொழிநுட்ப டிப்ளோமா (கைத்தொழில்) சான்றிதழ் போலியானதென உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2012 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மேற்குறித்த உத்தியோகத்தரின் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்தது. இவர் தேசிய தொழிநுட்ப டிப்ளோமா (கழத்தொழில்) பாடநெறியைப் பூர்த்தியிராமை 2010 செப்தெம்பர் 06 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் உரிய உயர் தொழிநுட்பக் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த கடிதம் பெறப்பட்டு 1 ½ ஆண்டுகள் கடக்கும் வரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமையால் அந் நாள் முதல் 2012 மார்ச் 31 வரை அவருக்கு ரூபா 396,159 தொகை சம்பளமாகவும் படிப்பணமாகவும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மாகாண கைத்தொழில் பணிப்பாளரின் 2012 மார்ச் 16 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் உரிய உத்தியோகத்தரின் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் 2012 மார்ச் மாதத்திற்காகவும் முழுச் சம்பளமும் படிப்பணமும் செலுத்தப்பட்டிருந்தது.

**5.3 செயற்பாட்டு திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உள்ளூராட்சி நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதன் கீழ் அந் நிறுவனங்களுக்கு சம்பள மீளளிப்பு வழங்கப்படுகையில் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியத்தில் உத்தியோகத்தர்களினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்கள் மற்றும் படிப்பணங்கள் வழங்கப்பட்டு பின்னர் மாகாண சபையால் மீளளிக்கப்பட வேண்டிய போதிலும் உள்ளராட்சி நிறுவனங்களின் சம்பளம் செலுத்தப்பட முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட சம்பளப் பட்டியலுக்காக ரூபா 4,388,965,566 தொகை 2012 ஆம் ஆண்டின் போது விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மக்கள் வீதிப் போக்குவரத்து அதிகாரசபைக்கு உரித்தான பாணந்துறை புதிய பஸ் தரிப்பிடத்தின் கீழ் மாடியிலுள்ள 46 கடைகள் 2012 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்படுவதற்கிருந்த மொத்த வாடகைத் தொகை ரூபா 3,309,855 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 15 கடைகளின் நிலுவை வாடகை ஒரு வருடத்தைப் பார்க்கிலும் பழைமைவாய்ந்த மீதி காணப்பட்டது. மேலும் 2009 சனவரி 01 ஆம் திகதி வாடகைக்கிடப்பட்டிருந்த இரு கடைகளில் 2013 மார்ச் மாதம் வரை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 38 ஆவது தேசிய விளையாட்டு விழாவிற்காக விளையாட்டு சீருடைகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 20,000,000 மதிப்பிடப்பட்டிருந்ததுடன் இறுதி விளையாட்டுப் போட்டிகள் 2012 நவம்பர் 30, திசெம்பர் 01 ஆம் 2 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) இறுதிப் போட்டிக்காகப் பெறப்பட்ட ரூபா 1,485,120 பெறுமதியான சீருடைகளும் பாதணிகளும் முறையான வகையில் விளையாட்டு வீரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் 142 விளையாட்டு உடைத்தொகுதிகளும் 62 பாதணிச் சோடிகளும் விளையாட்டு விழா முடிவுற்றதை அடுத்து பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(ii) 2012 ஆம் ஆண்டிற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 964,103 பெறுமதியான 181 ரீ சேட்களும் 52 பொடம்களும் 195 பாதணிச் சோடிகளும் 2013 சனவரி 31 ஆம் திகதி வரையிலும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது.

(iii) விளையாட்டு ஆடைகள் மற்றும் பாதணி, பெறுவனவுகள் மற்றும் விநியோகங்களை சரியாகப் பதிவு செய்யப்பட்டிராமையால் எஞ்சிய மீதி மற்றும் களஞ்சியத்தின் உள்ளபடியான மீதி ஒப்பிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் போது கம்பஹா சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் காரியாலயத்திற்கு உரித்தான 8 பொது மக்கள் சுகாதாரப் பரிசோதனைப் பிரிவுகளில் 52 பாடசாலைகளில் 14,243 மாணவர்களைப் பரீட்சிக்க வேண்டியதாக பாடசாலை சுகாதாரக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் படி உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 54.8 சதவீதத்திற்குச் சமனான 7,811 பேர் மாத்திரமே பரீட்சிக்கப்பட்டிருந்தனர். மேலும் அப் பாடசாலையில் 7,811 மாணவர்களில் 59 சதவீதத்திற்குச் சமனான 4,617 மாணவர்களின் சுகாதார நிலை தொடர்பான சிக்கல் உள்ளமை கண்டறியப்பட்ட காரணத்தால் சுகாதார கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை முறைப்படுத்தும் தேவைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்காக 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது கம்பஹா மாவட்டத்தின் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் காரியாலயத்தின் மூலம் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக முறையே ரூபா 3,720,000 தொகையும் ரூபா 3,924,643 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டின் போது டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 85.47 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஊ) வைத்தியசாலைத் தேவைப்பாட்டிற்காக 2009 நவம்பர் 18 ஆம் திகதி ரூபா 171,360 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 6 ''ஒப்தல்மோஸ்கோப் செட்'' 2013 ஏப்ரல் மாதமளவிலும் உரிய வைத்தியசாலைக்கு விநியோகிக்கப்படாது கம்பஹா பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் காரியாலயக் களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் உபகரணங்களின் உத்தரவாதக்காலமும் கடந்து 2 ஆண்டு காலம் கடந்திருந்தது. மேலும் 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் போது Occupational Health Units இற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 570,826 பெறுமதியான 27 சத்திர சிகிச்சை வைத்திய உபகரண விடயங்களும் 2009, 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 742,222 பெறுமதியான வேறு 33 சத்திர சிகிச்சை விடயங்களுக்கு உரித்தான பிரிவுகளுக்கு அனுப்பப்படாது 2013 சனவரி வரையிலும் களஞ்சியத்தில் காணப்பட்டது.

(எ) பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் 2007 ஆம் ஆண்டு முதல் காலாவதியாகிய மற்றும் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட ரூபா 1,199,698 பெறுமதியான மருந்துப் பொருள் இருப்பு 2011 சனவரி மாதம் கைதவிர்க்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,210,184 பெறுமதியான மருந்துப் பொருள் இருப்பு கைதவிர்க்கப்படுவதற்காக 2011 ஆகஸ்ட் 04 ஆம் திகதி அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. மிகையான மருந்துப் பொருட்கள் காலாவதியாவதற்கு முன்னர் வேறு ஏற்ற வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை வைத்தியசாலை அதிகாரிகளால் செயற்படுத்தப்படாமை இந் நிலைக்குக் காரணமாகியிருந்தது.

## 5.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

கம்பஹா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்தின் மூலம் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கும் வாட்களில் கடமையாற்றும் கனிஷ்ட பதவியணிக்கும் சமைத்த உணவைப் பரிமாறுவதற்காக ஏற்ற ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுக்கையில் விலை மனு மதிப்பீட்டிற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டிய கிரய மதிப்பீடு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் காரியாலயத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பஹா மாவட்டத்திலுள்ள 9 வைத்தியசாலைகளுக்காக 2013 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த சமைத்த உணவு கேள்வி மனுக்களுடன் 2012 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்திற்காகச் செலுத்தப்பட்டிருந்த செலவினங்களை ஒப்பிடுகையில் அம் மாதத்தில் மாத்திரம் ரூபா 750,000 இற்கு மேலான செலவின அதிகரிப்பு காணப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டின் போது ஏறத்தாழ ரூபா 6,000,000 இற்கும் மேற்பட்ட தொகை 9 வைத்தியசாலைகளில் உணவுக் கேள்விக்காக மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.5 இனங்காணப்பட்ட இழப்புகளும் நட்டங்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து அறவிடப்படுவதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது கைவிடப்படுவதற்குள்ள 05 ஆண்டுகளுக்குக் குறைவான 34 சம்பவங்களுக்குரித்தான இழப்புகள் ரூபா 4,792,454 தொகையாகவும் 5 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடையிலான 42 சம்பவங்களுக்குரித்தான இழப்புகள் ரூபா 1,544,876 தொகையாகவும் 10 ஆண்டுகளுக்கு மேலான 65 சம்பவங்களுக்குரித்தான இழப்புகள் ரூபா 4,625,713 தொகையாகவும் ரூபா 10,963,043 கூட்டுத்தொகையான நட்டங்களும் இழப்புகளும் தொடர்பாக 2012 திசெம்பர் 31 வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 3.2 கி.மீ. நீளமான மஹர நுகேகொடகந்த லியெத்த வீதியில் 1382.8 அஸ்போல்ட் மெட்ரிக்தொன் இடப்படுவதற்காக ரூபா 18,806,080 தொகை மாகாண சபை வீதி அதிகாரசபையால் தனியார் நிறுவகமொன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வீதிக்கு இடப்பட்டிருந்த அஸ்போல்ட் அளவு அங்கீகரிக்கப்பட்ட அளவைப் பார்க்கிலும் குறைவானதென ஆய்வுகூடப் பரிசோதனைகளிலிருந்து வெளியாகின. ஆய்கூட அறிக்கைகளின் படி நிலவும் தடிப்பமான வீதிக்காக உள்ளபடியாகப் பயன்படுத்தப்பட்ட அஸ்போல்ட் அளவு 1063 மெட்ரிக்தொன்களான போதிலும் கொடுப்பனவுப் பட்டியலின் படி, உறுதிப்படுத்திச் செலுத்தப்பட்ட அளவு 1382.8 மெட்ரிக் தொன்களானமையால் 319.8 அஸ்போல்ட் மெட்ரிக் தொன்களுக்காக ரூபா 4,349,280 தொகை

கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) புத்தளம் மாவட்டத்தின் அஸ்போல்ட் கொங்கிரீட் விநியோகம், இடப்படுவது மற்றும் தடிப்பமாக்கப்படுவதற்காக விலைகள் கோரப்பட்டிருந்ததுடன் அங்கு மேல்மாகாணத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த செயற்திட்ட அளவு கருத்திற்கொள்ளப்பட்டு மேலும் செயற்திட்டங்களை ஒப்படைக்க முடியாதெனக் குறிப்பிட்டு ஆகக் குறைந்த விலைகளை முன்வைத்த தனியார் கம்பனியின் விலைகள் நிராகரிக்கப்பட்டு இரண்டாவதாக ஆகக் குறைந்த விலைகளை முன்வைத்த வழங்குனருக்கு செயற்திட்டத்தை ஒப்படைப்பதற்கு கேள்விச் சபை எடுத்த தீர்மானம் காரணமாக நேர்ந்த நிதி நட்டம் ரூபா 10,813,012 ஆகக் காணப்பட்டது.

(ஈ) வீதி அனுமதிப்பத்திர உரிமை திருத்தப்படுகையில் வீதி மக்கட் போக்குவரத்து அதிகாரசபையால் 03 பஸ் வண்டிகளுக்கான கட்டணம் அறவிடப்பட்டிராமையால் ரூபா 180,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 5.6 விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரெஸ்படேரியன் மகளிர் கல்லூரியின் 15 கணனிகள் கொண்ட கணனி அறை ஒரு வருடத்திற்கு மேலான காலமாக மூடப்பட்டிருந்தது.

(ஆ) பயாகல பண்டாரநாயக்க பாடசாலைக்கு கடந்த ஆண்டுகளின் போதும் 2012 ஆம் ஆண்டின் போதும் ஆக்கபூர்வமான பயன்பாட்டிற்காகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,555,798 தொகையில் ரூபா 1,357,372 தொகை செலவிடப்பட்டிராமையால் வங்கிக் கணக்கில் சேமிக்கப்பட்டிருந்தது.

## 5.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 மற்றும் இதற்கு முன்னைய ஆண்டுகளுக்காக நிலுவையாகக் காணப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டமை தொடர்பாக மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள பதவியணிக்கு ஊக்குவிப்புப் படிப்பணம் வழங்கப்படுவதற்காக ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் இதற்கு முரணாக 2012 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரை அறவிடப்பட்ட நிலுவைக் கட்டணம் மற்றும் தண்டப்பணத்தை அடிப்படையாகக் கொண்டு படிப்பணம்

செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களக் காரியாலய வளாகத்தில் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு உரித்தான ஓர் கட்டிடத்தில் நடாத்தப்பட்ட எனினும் முறையான உடன்படிக்கை இன்றி 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 6,180,000 தொகையான அலுவலக வாடகை ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பிரதான செயலாளர் காரியாலய கொள்வனவு நடைமுறை பின்பற்றப்படாது, வாடகை உடன்படிக்கையின்றி மாதமொன்றிற்கு ரூபா 40,000 வாடகை அடிப்படையில் ஓர் வாகனம் பெற்றுக்கொள்ளப்பட்டு 2009 யூன் மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,720,000 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது எந்தச் சந்தர்ப்பத்திலும் அவ் வாகனம் அலுவலக வளாகத்திற்கு வந்தமை பற்றி உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபைக்குச் சம்பளங்கள் மற்றும் படிப்பணக் கொடுப்பனவிற்காக மேல் மாகாண சபையின் 2012 வருடாந்த காசுப்பாய்ச்சலின் மூலம் ரூபா 10,482,000 தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலாக ஒப்பந்த அடிப்படையில் அவ்வப்போது ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தமையால் சம்பளங்கள் மற்றும் படிப்பணமாக ரூபா 33,403,566 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், சம்பளங்கள் மற்றும் படிப்பண ஏற்பாடு ரூபா 22,921,566 தொகையால் மிகைத்திருந்தது.

(உ) ஆளநரின் அங்கீகாரம் இன்றி ஊழியர்களின் சேமிக்கப்பட்ட லீவிற்காகவும் சக ஊழியர்களின் ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காகவும் இடர் முகாமைத்துவ அதிகாரசபை நிதியத்திலிருந்து வருடாந்தம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இதற்காக முறையே ரூபா 508,562 தொகையும் ரூபா 680,350 தொகையுமாக ரூபா 1,188,912 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) வீதி மக்கள் போக்குவரத்து அதிகாரசபையின் ஊழியர்கள்.'. உத்தியோகத்தர்களுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் லீவு நாள் சம்பளமாக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 10,799,616 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஊழியர்கள்/ உத்தியோகத்தர்களுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் லீவு நாள் சம்பளக் கொடுப்பனவு செய்யப்படுகையில் இதற்கு உரித்தான 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 07/97 ஆம் இலக்க மற்றும் 08/97 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் மேற்கொள்ளப்பட்ட கடமைகள்

தொடர்பான அறிக்கையும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.8 முறையான வகையில் கையேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

வெள்ளக் கட்டுப்பாடு, பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், சுற்றாடலுக்குச் சாதகமான வாழ்க்கையை உறுதிப்படுத்தல், பாரம்பரிய அறிவு மற்றும் கலாச்சாரப் பண்புகளைப் பாதுகாத்தல், இரசாயனப் பசளையைப் பயன்படுத்தி விளைவிக்கும் பயிர்களின் உற்பத்தியை மேம்படுத்தல் மற்றும் உல்லாசப் பயணிகளைக் கவருதல் போன்ற விடயங்களை நோக்காகக் கொண்டு ''பராவ'' எனும் பெயருடனான உயிரியல் பூங்காச் செயற்திட்டத்தைக் கொழும்பு மாவட்டத்தின் 03 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உரித்தான அரசாங்கக் காணிகளில் 181 ஹெக்டேயர் ஈடுபடுத்தும் நோக்கில் 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை பல்வேறு நடவடிக்கைகளுக்காக ரூபா 9,164,303 செலவிடப்பட்டிருந்தது. உரிய காணிகளை ஒப்படைப்பது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாது விடுவதற்கு 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானம் எடுத்ததை அடுத்து அந் நோக்கங்கள் எதுவும் எய்தப்பட முடியாதிருந்தமையால் செலவிடப்பட்ட ரூபா 9,164,303 தொகையும் சிக்கனமற்ற செலவினமாகியது.

**5.9 பதவியணி முகாமைத்துவம்**

**5.9.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

(அ) மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

| | அங்கீகரிக்கப் பட்டது | உள்ளபடி யானது | வெற்றிடம் |
|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரம் | 1,672 | 1,580 | 92 |
| மூன்றாம் தரம் | 651 | 567 | 84 |
| இரண்டாம் தரம் | 6,186 | 5,704 | 482 |
| ஆரம்ப தரம் | 3,662 | 3,488 | 174 |
| மொத்தம் | 12,171 | 11,339 | 832 |

(ஆ) பாடசாலைப் பதவியணியினர்

| | அங்கீகரிக்கப் பட்டது | உள்ளபடி யானது | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் | 1,732 | 1,254 | 478 | - |
| சிற்றூழியர்கள் மற்றும் | 34,374 | 31,189 | 3,185 | - |
| உதவியாளர்கள் | 1,051 | 3,054 | - | 2,003 |
| | 37,157 | 35,497 | 3,663 | 2,003 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மாகாண சபையின் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் உயர் முகாமைத்துவ பதவிகளை உள்ளடக்கிய பல்வேறு பதவிகளில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவில் ஆளுநர் அவர்களின்/ மாகாண அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் உயர் தரங்களிலுள்ள பதவி வெற்றிடங்களுக்கு பதில் கடமை உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ii) கொழும்பு வலயத்தின் மகளிர் பாடசாலை ஒன்றில் முன்னாள் பெண் அதிபர் ஒருவர் 2012 சனவரி 12 ஆம் திகதி முதல் பொரளை வலய கல்விக் காரியாலயத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அவருக்கு பொரளை வலய கல்விக் காரியாலயத்திலிருந்து எவ்வித கடமையும் ஒப்படைக்கப்பட்டிராததுடன் தாபன விதிக்கோவைக்கு மாறாக லீவும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(iii) இடர் முகாமைத்துவ அதிகாரசபையின் சகல பதவியணிக்காகவும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தகுதிகாண் பரீட்சை நடாத்தப்படாது உத்தியோகத்தர்களை அவர்களது பதவிகளில் நிரந்தரமாக்கி தொடர்ந்து வருடாந்த சம்பள ஏற்றம் செலுத்தப்பட்டிருந்தது.

## 5.10 தோல்வியடைந்த செயற்திட்டங்கள்

வீடமைப்பு நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையாலும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனை நடவடிக்கைகள் அரச பெறியியல் கூட்டுத்தாபனத்தாலும் மேற்கொள்ளப்பட்டு ரூபா 68,597,020 தொகையான கிரய மதிப்பீட்டின் கீழ் வேலை பூர்த்திசெய்யப்பட்ட ஹோமாகம பஸ் தரிப்பிடம் 2012 நவம்பர் 21 ஆம் திகதி திறக்கப்பட்டு 2012 திசெம்பர் 10 ஆம் திகதி முதல் ஓட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு கிழமையாவதற்கு முன்னர் பஸ் தரிப்பிடத்திற்கு பஸ் வண்டிகள் உட்பிரவேசிக்க முடியாத நிலை ஏற்பட்டமையால் 2012 திசெம்பர் 18 ஆம் திகதி முதல் ஓட்ட நடவடிக்கைகள் மீள பழைய தரிப்பிடத்திற்குத் தொடர்புபடுத்தப்பட வேண்டியிருந்தது.

## 5.11 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஒன்பதாவது பட்டோலையின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிருவாகத்தை மேற்பார்வை செய்வதற்கு மாகாண சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வைக்காக முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. உள்ளூராட்சி அதிகாரசபைக் கணக்குகளின் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் உள்ளூராட்சி அதிகாரசபை நலனாளிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. மேலும் உள்ளூராட்சி அதிகாரசபைக் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு அபிப்பிராயம் மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக மீளாய்வாண்டை உள்ளடக்கிய அண்மைய 04 ஆண்டுகளின் தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | கணக்காய்வு செய்யப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் (நிதிக்கூற்றுக்கள்) எண்ணிக்கை | கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியானதாக (நிதிக்கூற்றுக்களின்) எண்ணிக்கை |
|---|---|---|
| 2008 | 48 | 22 |
| 2009 | 48 | 22 |
| 2010 | 48 | 13 |
| 2011 | 48 | 20 |
| 2012 | 48 | 26 |

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 48 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிலுவை வருமானம் ரூபா 6,585,240,826 ஆக இருந்தது.

(இ) 12 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உத்தியோகத்தர்கள்/ ஏனையோருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமையதிபதியால் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களின் படி 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடுவதற்கிருந்த மிகைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 31,248,292 ஆக இருந்தது.

(ஈ) உள்ளூராட்சி அதிகாரசபைச் சேவைகளின் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புத் தொகை அனுப்பப்படுகையில் உள்ளூராட்சி நிறுவனங்களில் காண்பிக்கப்பட்ட குறைவான கவனம் காரணமாக பாரிய தாமதம் ஏற்பட்டிருந்தமையால் நிலுவைத் தொகையில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட மானியங்களில் இந் நிலுவைத் தொகை கழிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந் நிலுவைத் தொகை கழிக்கப்பட்டு நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| மாவட்டம் | உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை | 2013 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| கொழும்பு | 13 | 386,205,450 |
| கம்பஹா | 19 | 23,957,956 |
| களுத்துறை | 14 | 64,730,056 |
| | 46 | 474,893,462 |

## 6 கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 கூட்டிணைந்த திட்டம்

முாகாண சபையால் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்திற்கு 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபைக்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.3 உள்ளகக் கணக்காய்வு

மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மாகாண சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழக்களின் செயற்பாடு நலிவான நிலையில் காணப்பட்டது.

## 6.5 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை சமர்ப்பித்தல்

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி கடந்த ஆண்டுகளில் மேல்மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| ஆண்டு | அறிக்கை வழங்கப்பட்ட திகதி | அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 2008 | 2009.12.10 | 2010.02.09 |
| 2009 | 2010.10.26 | 2013.01.08 |
| 2010 | 2012.01.16 | 2012.05.22 |
| 2011 | 2013.02.28 | 2013.12.03 |

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) மாகாண சபை அபிவிருத்தித் திட்டம்
(ஈ) உள்ளகக் கணக்காய்வு
(உ) உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வை
(ஊ) பதவியணியினர்